இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையச் சட்டம்

---

*[1984, சனவரி மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, சனவரி மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

விலை : ரூபா 1.00 தபாற் செலவு : சதம் 90

# 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையச் சட்டம்

[1984, சனவரி மாதம் 13 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 124/78

1332

**புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையமொன்றைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

## பாகம் I

### புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையத்தைத் தாபித்தல்

2. (1) புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையம் என அழைக்கப்படவேண்டியதான (இதனகத்துப்பின்னர், "நிலையம்" என்று குறிப்பிடு செய்யப்படும்) நிலையம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது 6 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவர்களான ஆளுநர்சபை உறுப்பினர்களையும் காலத்துக்குக்காலம் ஆளுநர் சபையால் நிலையத்தின் உறுப்பினர்களாக இருப்பதற்கு சேர்த்துக்கொள்ளப்படக்கூடியவர்களான அத்தகைய எண்ணிக்கைகொண்ட வேறு ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும். **புடைவைத் தொழிற் பயிற்சி, சேவைகள் நிலையத்தைத் தாபித்தல்.**

(2) நிலையம், (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறுவழியுரிமையும், பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அதன் கூட்டிணைப்புப் பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. புடைவைத் தொழிற்றுறையில் தொழில்நுட்பச் செய்முறைகளினதும், முகாமைத்துவத் திறன்களினதும் மேம்பாடு, அபிவிருத்தியும் அந்நிலையம் தாபித்ததன் குறிக்கோள்களாகும் என்பதுடன், குறிப்பாக— **நிலையத்தின் குறிக்கோள்களும் பணிகளும்.**

(அ) புடைவைத்தொழில் ஆராய்ச்சியை வளர்ப்பதற்கும், புடைவைத் தொழில் ஆராய்ச்சியில் உதவுவதற்கும், அதற்கு ஊக்கமளிப்பதற்கும், ஒத்துழைப்பு நல்குவதற்குமானவையாக இருத்தலும் வேண்டும்;

(ஆ) புடைவைத் தொழிற்றுறையிலுள்ள தொழிற் கூறுகளுக்குத் தொழிநுட்ப, பொருளாதார உசாத்துணைச் சேவைகளைக் கொடுக்க முன்வருவனவாக இருத்தலும் வேண்டும்;

(இ) புடைவைத் தொழிற்றுறையின் அபிவிருத்தியைப் பாதிக்கும் நிறுவனஞ்சார் காரணிகள் தொடர்பான நுண்ணாய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் நிறைவேற்றுவனவாக இருத்தலும் வேண்டும்;

2—எ 073868—2,775 (11/83)

(ஈ) புடைவைத்தொழில் தொடர்பானதும் புடைவை உற்பத்தி சம்பந்தமான கற்கைத்துறை தொடர்பானதுமான தொழிற் பயிற்சி வசதிகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்பாடுசெய்வதன் மூலம் அல்லது செயற்படுத்துவதன் மூலம் வேலையாட்களினதும் நிறைவேற்றலுவலர்களினதும் தொழில்சார் ஆற்றலை மேம்படுத்துவதற்கானவையாகவும், அத்துடன் அது தொடர்பில் டிப்புளோமாக்களையும், பட்டங்களையும், பரிசில்களையும், திறமைச்சித்திகளையும் அளிப்பதற்கானவையாகவும் இருத்தலும் வேண்டும்.

(உ) புடைவைத்தொழில் ஆராய்ச்சி, புடைவைத் தொழில்பயிற்சி தொடர்பிலான மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் வைக்கித் தொடக்கிவைப்பதற்கும், அவற்றை நடாத்துவதற்கும், புடைவைத்தொழில் ஆராய்ச்சி, புடைவைத் தொழிற்பயிற்சி தொடர்பிலான பருவ வெளியீடுகளையும் சஞ்சிகைகளையும் வெளியிடுவதற்குமானவையாக இருத்தலும் வேண்டும்;

(ஊ) அமைச்சரினால் ஆலோசனைக்கென நிலையத்துக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியதான ஏதேனும் கருமம் பற்றி ஆலோசனை அளித்தல்;

(எ) புடைவை கைத்தொழில்துறையில் உள்ளவையும், இதையொத்த தன்மையானவையுமான வேறு ஆராய்ச்சி நிறுவகங்களோடு ஒத்துழைப்பதற்கானவையாக இருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஏ) புடைவைக் கைத்தொழிற் கூறுகளின் குறித்த தொழினுட்பப் பிரச்சினைகளை ஆராய்வதற்கும், அவற்றுக்கு அவசியமான வழிகாட்டுகையையும், ஆலோசனையையும் அளிப்பதற்குமானவையாக இருத்தலும் வேண்டும்.

நிலையத்தின் தத்துவங்கள்.

4. நிலையமானது, அதன் குறிக்கோள்களையும், கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு நியாயமாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாகப் பின்வருவனவற்றையும் செய்யலாம் :—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தன்மைத்தான எம் முறையிலும் கொள்ளலாம், வைத்திருக்கலாம், குத்தகைக்கு எடுக்கலாம் அல்லது குத்தகைக்கு விடலாம் அல்லது வாடகைக்கு எடுக்கலாம் அல்லது வாடகைக்கு விடலாம், ஈடுவைக்கலாம், அடைவு வைக்கலாம், விற்கலாம் அல்லது வேறு வகையாகக் கையுதிர்க்கலாம்;

(ஆ) அப்புடைவைத்தொழில் தொடர்பான வெளிக்கள தொழிற்பயிற்சி நிலையங்களையும் முன்னோடிக் கருத்திட்டங்களையும் கொள்ளலாம், தாபிக்கலாம், நிறுவலாம் அத்துடன் தொழிற்படுத்தலாம்;

(இ) நிலையத்தின் நோக்கத்துக்குத் தேவைப்படும் பொறித் தொகுதியையும் எந்திரத் தொகுதியையும் சாதனத்தையும் இறக்குமதி செய்யலாம் என்பதுடன், நிலையத்தின் அலுவல்களைத் திறமையாக நடாத்துவதற்கென சாதனத்தையும், நிதிகளையும், ஆளணியினரையும் வேறேதேனும் உதவியையும் பெறலாம்;

(ஈ) புடைவைத் தொழிலின் எல்லா அமிசங்கள் பற்றியும் ஆராய்ச்சி நடாத்தலாம், அதற்கு உதவலாம், அதனை ஒருங்கிணைக்கலாம் அதற்கு ஊக்குதவி அளிக்கலாம் ;

(உ) நிலையத்தினால் அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்குக் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடலாம் ;

(ஊ) அதன் அலுவலர்கள், சேவையாளர்கள் ஆகியோரை நியமிக்கலாம், தொழிலுக்கமர்த்தலாம், அவர்களுக்கு ஊதியமளிக்கலாம், அத்துடன் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் ;

(எ) அதன் ஊழியர்களுக்கென சகாய நிதியங்களைத் தாபித்துப் பேணிவரலாம், அத்துடன் அவர்களுக்கான நலன்புரி பொழுதுபோக்குவசதிகளை ஏற்பாடுசெய்யலாம் ;

(ஏ) நிலையத்தின் அலுவல்களின் திருவாகம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம் ;

(ஐ) அதன் தொழிலை திறமையாகக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமானவையென ஆளுநர்சபை கருதக்கூடியவாறான அத்தகைய பணிகளை எவரேனும் உறுப்பினருக்கு, நிலையத்தின் பணிப்பாளருக்கு அல்லது எவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம் ;

(ஒ) ஆளுநர் சபையின் அபிப்பிராயத்தில் நிலையத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான நுண்ணாய்வுகளை மேற்கொண்டு தரவைப் பதியும் நோக்கங்களுக்காகவும், புத்தகங்களையும் ஆவணங்களையும் பார்வையிடுவதற்காகவும் அவற்றிலிருந்து பிரதிகளை அல்லது பொழிப்புகளை எடுப்பதற்காகவும் ஏதேனும் காணிக்குள் அல்லது எவையேனும் வளவுக்குள் பிரவேசிக்கலாம் ; அத்துடன்

(ஓ) ஆளுநர் சபையின் அபிப்பிராயப்படி நிலையத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான அல்லது உகந்தவையான அல்லது இடைநேர்விளைவானவையான வேறு எல்லாக் காரியங்களையும் செய்யலாம்.

5. நிலையமானது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், புடைவைத் தொழிற்துறை தொடர்பான அரசாங்கத்தின் பொதுக் கொள்கையுடனும் அத்தகைய கொள்கை தொடர்பாக அமைச்சரால் வழங்கப்பட்ட எவையேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும். நிலையம், அமைச்சரின் பணிப்புகளின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல்.

6. நிலையமானது அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களான பின்வருவோரைக்கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஆளுநர் சபையொன்றைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்— ஆளுநர்சபையின் அமைப்பு.

(அ) (i) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அல்லது

(ii) அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்த வேறு எவரேனும் அலுவலர் ;

இவரே சபையின் தவிசாளராதல் வேண்டும்.

(ஆ) கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலரொருவர் ;

(இ) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவருமான அலுவலரொருவர் ;

(ஈ) அங்கிகள் ஏற்றுமதியாளர் கழகத்தின் பிரதிநிதியொருவர் ;

(உ) பருத்திப்புடைவை உற்பத்தியாளர் கழகத்தின் பிரதிநிதியொருவர் ;

(ஊ) மேசுவகை உற்பத்தியாளர் கழகத்தின் பிரதிநிதியொருவர் ;

(எ) புடைவை அச்சிடுபவர் கழகத்தின் பிரதிநிதியொருவர் ;

(ஏ) கைத்தறித்தொழிற்துறையின் பிரதிநிதியொருவர் ;

(ஐ) புடைவை நிறுவகத்தின் (இலங்கைப் பிரிவின்) தலைவர் ; அத்துடன்

(ஒ) வேறு மூன்று உறுப்பினர்கள்.

உறுப்பாண்மைக்கான தகைமையீனம்.

7. ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராகவரின் ;

(ஆ) நிலையத்தினால் அல்லது நிலையத்தின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை, நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ, கொண்டிருப்பாரெனின் அல்லது துய்ப்பாரெனின் ; அல்லது

(இ) சபையின் உறுப்பினரொருவர் என்ற தன்மையில் அவரது பணிகளை நிறைவேற்றுவதனை பங்கமான முறையில் பாதிக்கும் சாத்தியமுடைய அத்தகைய ஏதேனும் நிதிசார் நலனை அல்லது வேறு நலனைக் கொண்டிருப்பாரெனின்,

சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து உறுப்பினராக இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக் காலம்.

8. தவிசாளர், அமைச்சரின் அமைச்சின் செயலாளராக இருக்குமிடத்து, தவிசாளரும், 6 ஆம் பிரிவின் (ஐ) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரும் தவிர்ந்த சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பினால், பதவியிலிருந்து விலகுவதினால், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்று ஆண்டுக்காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

9. (1) சபையின் எவரேனும் உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிட்டு இப்பொருள்பட எழுதப்பட்ட கடிதத்தின் மூலம், எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம். உறுப்பினர் களின் இறப்பும், அவர்கள் பதவி விலகுதலும், அவர்களைப் பதவியிலிருந்து அகற்றலும்.

(2) அமைச்சரானவர், எவரேனும் உறுப்பினரைக் காரணம் எதுவும் காட்டாமலே பதவியிலிருந்து அகற்றுதல் உசிதமானதெனக்கருதினால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், எவரேனும் உறுப்பினரை அவ்வாறு பதவியிலிருந்து அகற்றலாம் ; அத்தகைய அகற்றுகை எதுவும் எந் நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், எந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாரோ அந்த அமைச்சரின் அல்லது அத்தகைய உறுப்பினரைப் பெயர் குறித்து நியமிக்கும் அதிகாரியின் கலந்தாலோசனையுடன் தவிர, இவ்வுட்பிரிவின் கீழ் உறுப்பினரெவரும் அகற்றப்படுதலாகாது.

(3) சபையின் எவரேனும் உறுப்பினர் இறக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது முற்போந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில், அமைச்சர் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட அதேமுறையில் வேறோர் ஆளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எவ்வுறுப்பினரைத் தொடர்ந்து பதவிக்கு வருகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) சபையின் எவரேனும் உறுப்பினர், சுகவீனங் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்திற்காக ஏதேனும் காலப்பகுதியின்போது தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட அதே முறையில், அவரது இடத்தில் அத்தகைய காலத்தின்போது பதிற் கடமையாற்றிவென அமைச்சர் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(5) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், தவிசாளர் அமைச்சின் செயலாளராக இருக்குமிடத்து தவிசாளருக்கும் 6 ஆம் பிரிவின் (ஐ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப் பட்டவரான உறுப்பினருக்கும் ஏற்புடையனவாகா.

10. உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருக்கின்றது என்ற காரணத்தினால் மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தினால் மட்டும் சபையின் செயல் அல்லது முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது. வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும் செயல்கள் செல்லுபடியற்றனவாதலாகாது.

சபையின் உறுப் பினர்களின் ஊதியம்.

11. சபையின் உறுப்பினர்களுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமூக மளிப்பதற்கென நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய ஊதியத்தினை நிலையத்தின் நிதியத்திலிருந்து கொடுக்கலாம்.

சபையின் கூட்டங்கள்.

12. சபையானது, சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அதன் கூட்டநடப்பெண் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும் விதிகளை ஆக்கலாம்.

தத்துவங்களைக் கையளித்தல்.

13. (1) சபையானது, அதன் தத்துவங்களுள்ளும் கடமைகளுள்ளும் எதனையும் தவிசாளருக்கு அல்லது வேறு எவரேனும் சபை உறுப்பின ருக்கு அல்லது நிலையத்தின் பணிப்பாளருக்கு அல்லது நிலையத்தின் எவரே னும் ஊழியருக்குக் கையளிக்கலாம்.

(2) ஏராம் உட்பிரிவின்கீழ் சபையின் எவையேனும் தத்துவங்கள் அல்லது கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளவரான தவிசாளர், வேறு உறுப்பினர், பணிப்பாளர் அல்லது ஊழியர், அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும், சபையின் பொதுவான அல்லது சிறப் பான பணிப்புகளுக்கமைவாக, பிரயோகித்தலும், புரிதலும் வேண்டும்.

சபையின் துணைத் தவிசாளர்.

14. (1) அமைச்சரானவர் தவிசாளருடனை கலந்தாலோசனையுடன், 6 ஆம் பிரிவின்கீழ் அவரால் நியமிக்கப்படும் உறுப்பினர்களிடையே யிருந்து துணைத் தவிசாளரொருவரை நியமிக்கலாம்.

(2) தவிசாளர், சபையின் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும்; அல்லது அவர் சமூகமாயிருக்கவில்லையாயின் துணைத் தவிசாளர் சபையின் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன், தவிசாளர், துணைத் தவிசாளர் இருவரும் சமூகமாயிருக்கவில்லையாயின், தவிசாளரின் அல்லது துணைத் தவிசாளரின் இடத்தில் செயற்படுவதற்கென அமைச்ச ரால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சபையின் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்படவேண்டிய ஏதேனும் கருமத்தின் மீதான வாக்குகள் சமமாக இருக்குமிடத்து, அத்தகைய கூட் டத்திற்கு தலைமைதாங்குபவரான உறுப்பினர் அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமான இரண்டாவது வாக்கொன்றை அல்லது அறுதி யிடும் வாக்கொன்றை உடையவராய் இருத்தலும் வேண்டும்.

சபை நிலையத்தின் அலுவல்களை நிருவகித்தல்.

15. சபையானது, நிலையத்தின் அலுவல்களை நிருவகித்தல் வேண்டும்; நிலையத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம், அத்துடன் நிலையத்தின் கடமைகளைப் புரியலாம்.

சபையின் விதிகள்.

16. சபையானது நிலையத்தின் உறுப்பினர்களாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் பதிவுசெய்து கொள்வதற்கும் அத்தகைய உறுப்பினர் களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும், அவர்களை உறுப்பாண்மையி லிருந்து அகற்றுவதற்கும் ஆன விதிகளை ஆக்கலாம்.

## பாகம் II

## நிலையத்தின் பணிப்பாளரையும், நிலையத்தின் வேறு அலுவலர் களையும் சேவையாளர்களையும் நியமித்தல்

நிலையத்தின் பணிப்பாளர்.

17. (1) அமைச்சரானவர், சபையுடனான கலந்தாலோசனையுடன் நிலையத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருக்க வேண்டியவரான பணிப்பாளரொருவரை அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும். பணிப்பாளரின் ஊதியம், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அமைச்சரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர், சபையால் தனக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரை அமைச்சர் பதவியில் இருந்து அகற்றலாம்; அத்தகைய அகற்றுகை ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்கு உட்படுத்தப்படுதல் ஆகாது.

நிலையத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பில் சபைக்குள்ள தத்துவங்கள்.

18. (1) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு அமைவாக சபையானது—

(அ) நிலையத்தின் பணியாட்டொகுதியினை நியமிக்கலாம், பதவி விலக்கலாம், அத்துடன் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(ஆ) பணியாட்டொகுதியினரின் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதி, நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நன்மைக்காக சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபிக்கலாம் அத்துடன், ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் சபையால் விதிகள் ஆக்கப்படலாம்.

பகிரங்க அலுவலர்களையும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

19. (1) சபையின் வேண்டுதலின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்கு நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்துக்கு சேவை செய்வதாக உடன்பட்டுக்கொள்ளும் ஆளெவரையும் நிலையம் தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அத்தகைய ஆளினால் நிலையத்துக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலம் எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவ்வாளினால் அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுதலின் பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய உறுப்பினரதும், அலுவலரதும் அல்லது சேவையாளரதும் அத்துடன் விடயத்திற்கேற்ப, உள்ளூராட்சிச்சேவை ஆலோசனைச்சபையினதும் அல்லது உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துக்கு நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் சபையினாலும் உள்ளூராட்சிச்சேவை ஆலோசனைச்சபையினாலும் அல்லது அந்த உள்ளூரதிகாரசபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடிய (ஓய்வூதிய உரிமை, சகாயநிதிய உரிமை பற்றிய நியதி நிபந்தனைகளை உள்ளிட்ட) அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) சபையின் வேண்டுதலின்பேரில், பகிரங்க கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையினதும் சம்மதத்துடன் சபையினால் அதையொத்த சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துக்கு நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் சபையினாலும் சொல்லப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடிய ஓய்வூதிய உரிமை, சகாயநிதிய உரிமை பற்றிய நியதி நிபந்தனைகள் உள்ளிட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) எவரேனும் ஆள் (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் அமைந்தொழுகவேண்டிய அதே ஒழுக்காற்றுக்கட்டுப்பாட்டுக்கு அத்தகைய ஆளும் அமைந்தவராதல் வேண்டும்.

20. நிலையத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச்சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிலையத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

21. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிலையமானது, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிலையமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

## பாகம் III

## நிதி

22. (1) நிலையத்தின் தொடக்க மூலதனமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும் அரசாங்கத்தினால் நிலையத்துக்குக் கிடைக்கச்செய்யப்படக்கூடியவாறான அத்தகைய தொகையாக இருத்தல் வேண்டும்.

நிலையத்தின் மூலதனம்.

(2) நிலையத்தின் மூலதனமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்தோடு, நிலையத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினால் காலத்துக்குக்காலம் அதிகரிக்கப்படலாம்.

23. (1) நிலையம் அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்.

நிலையத்தின் நிதியம்.

(2) பின்வரும் வழிகளில் நிலையத்தினால் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், நிலையத்தின் நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்துக்குக் கொடுக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ;

(ஆ) பதிவுசெய்தலின்மீது உறுப்பினர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் ; அத்துடன்

(இ) நிலையத்தினால் அளிக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகளுக்காக விதிக்கப்படும் கட்டணங்கள்.

(3) நிலையத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அந்நிலையத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிலையத்தின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

நிதியாண்டு.

24. நிலையத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளைக் கணக்காய்தல்.

25. (1) சபையானது வருமானம், செலவு, இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் நிலையத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகத் தகுந்த கணக்குப் புத்தகங்களைப் பேணிவரச் செய்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளாவன நிலையத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

## பொது

ஆண்டறிக்கை.

26. சபையானது நிலையத்தின் வேலை பற்றிய அறிக்கையொன்றினை ஆண்டுதோறும் தயாரித்தல் வேண்டும்.

காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தை நிலையத்துக்காகக் கொள்ளுதல்.

27. (1) ஏதேனும் அசைவற்ற ஆதனம், நிலையத்தின் ஏதேனும் நோக்கத்துக்காகக் கொள்ளப்படவேண்டுமெனத் தேவைப்படுகின்றவிடத்தும், உத்தேசக் கொள்ளுதலை கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் அங்கீகரிக்குமிடத்தும், எந்நோக்கத்துக்காக காணி தேவைப்படுகின்றதோ அந்நோக்கம் பகிரங்க நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அக்காணி கொள்ளப்படலாமென்பதுடன் நிலையத்துக்குக் கைமாற்றவும் படலாம்.

(2) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் நிலையத்துக்காகக் கொள்ளப்பட்ட அசைவற்ற ஏதேனும் ஆதனத்துக்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை அந்நிலையத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

அசைவுள்ள அசைவற்ற அரசின் ஆதனங்கள் நிலையத்துக்கு கிடைக்கத்தக்கனவாகச் செய்தல்.

28. (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் நிலையத்தின் ஏதேனும் நோக்கத்துக்கென தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கமானது முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக் கொடையொன்று அல்லது குத்தகையொன்று செய்யப்படக்கூடிய நோக்கமொன்றாகக் கருதப்படல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க, அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நிலையத்துக்குச் செய்யப்படும் அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக் கொடையொன்றுக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் நிலையத்தின் நோக்கத்துக்கெனத் தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சர், எந்த அமைச்சுக்கு அல்லது திணைக்களத்திற்கு அத்தகைய ஆதனம் சேர்ந்ததோ அல்லது எந்த அமைச்சு அல்லது திணைக்களம் அத்தகைய ஆதனத்தை உடைமை கொண்டுள்ளதோ அந்த அமைச்சுச் செயலாளரின் அல்லது திணைக்களத் தலைவருடைய சம்மதத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிலையத்திற்குக் கைமாற்றலாம் என்பதுடன், அதனை அதற்கு உரித்தாக்கலாம்.

29. அரசாங்கமானது, நிலையத்தின் பாவனைக்கு அவசியமென நிலையத்தினால் கருதக்கூடியவாறான அத்தகைய காணியை, கட்டிடத்தை அத்துடன் வேறு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும்.

*அரசாங்கம் வளவுகள் முதலியவற்றை நிலையத்தின் பயன்பாட்டிற்கென கிடைக்கத் தக்கனவாகச் செய்தல்.*

30. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் நிலையத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக நிலையத்திற்கெதிராக; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்பேரில் நிலையத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக,

தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதல் ஆகாது.

*இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்படும் செயலுக்கான பாதுகாப்பு.*

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாரான அத்தகைய எவரேனும் ஆளினால், இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட செலவெதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் துணிந்தால், சபையின் நிதியத்திலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

31. நிலையத்துக்கு எதிராகக் கொணரப்படும் ஏதேனும் வழக்கில், நிலையத்தின் எந்தவொரு உறுப்பினரின் உடலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

*நிலையத்தின் உறுப்பினரொருவரின் உடலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.*

ஏதேனும் காணிக்குள் அல்லது வளவுகளுக்குள் பிரவேசிப்பதற்கு சபைக்கு அல்லது அதன் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது சபையின் அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் எவரேனும் ஊழியருக்கு உள்ள தத்துவம்.

32. சபை அல்லது சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது சபையின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றும் நிலையத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் பார்வையிடுவதற்காக, புலனாய்வு செய்வதற்காக அத்துடன் தரவுகளை பதிவதற்காக ஏதேனும் காணிக்குள் அல்லது வளவுகளுக்குள் அல்லது காணியின்மீது அல்லது வளவுகளின்மீது நுழைதல் அதற்கு அல்லது அவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

சபையை அல்லது எவரேனும் உறுப்பினரை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஊழியரைத் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாக்கப்படுதல்.

33. முப்பத்திரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் புலனாய்வு செய்கையில் அல்லது பார்வையிடுகையில் அல்லது தரவுகளைப் பதிகையில் சபையை அல்லது சபையின் எவரேனும் உறுப்பினரை அல்லது சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அல்லது ஊழியரைத் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தகவலைப் பெற்றுக் கொள்ளுதலுக்கான தத்துவம்.

34. (1) புடைவைத் தொழிற்றுறையில் அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான துறையில் அறிவித்தலில் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்கென முன்னப்பட்ட எவையேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் தொடர்பில் அவரது அறிவுக்கு எட்டிய எவையேனும் கருமம் தொடர்பிலான தகவலைக் கொடுத்துதவும்படி எவரேனும் ஆளுக்கு, 3 ஆம், 4 ஆம் பிரிவுகளின்கீழ் அதன் ஏதேனும் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு, நிறைவேற்றுவதற்கு நிலையத்தினை இயலச்செய்யும் நோக்கத்திற்கென சபையின் தவிசாளர், உறுப்பினரொருவர், நிலையத்தின் பணிப்பாளர் அல்லது சபையால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் மூலம் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆள் அத்தகைய தகவலைப் பலாறியக் கூறுவதினின்று விலக்கப்படுமிடத்தொழிய, அத்தகைய அறி

வித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுக வேண்டுவது ஆளொவரினதும் கடமையாதல் வேண்டும்.

(3) நியாயமான காரணமின்றி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அத்தகைய தகவல் பொய்யான தகவலெனத் தெரிந்துகொண்டும் அத்தகவலைக் கொடுத்துதவுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

35. இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஆள் ஒவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு, அல்லது ஐந்நூறு ரூபாவுக்கு அதிகமாகாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். தவறுகளுக்கான தண்டம்.

36. அமைச்சரானவர் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கடமைகளைப் புரிவதற்கும் என சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகளை எழுத்தில் வழங்கலாமென்பதுடன், சபையானது அத்தகைய பணிப்புக்களை பயனுறுத்தலும் வேண்டும். சபைக்கு சிறப்பான பணிப்புகளையும் பொதுவான பணிப்புகளையும் வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

37. (1) சபையானது, எக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல் வேண்டுமென இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் அது விதிகளை ஆக்கலாம். விதிகளை ஆக்குவதற்கு சபைக்குள்ள தத்துவம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட விதியொன்று அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படும் வரையில் பயனுறுதலாகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.